149

# முரசொலி

தொண்டைமான்

2 அணா

மு.கருணாநிதி

முரசு 1 | சென்னை | 30—7—54 | வெள்ளி | ஒலி 18




சக்கரவர்த்தி திருமகன்
ன்ற தலைப்பில் ஆச்சாரியார் அவர்கள் 'கல்கி' இதழில் தொடர்ந்து எழுதி வருவது வாசகர்கள் அறிந்ததே. இதுவரை பத்து கட்டுரைகள் வந்துள்ளன. திருமாலின் பத்து முரண்பட்ட அவதாரங்களைப் போலவே— ஆச்சாரியாரின் பத்து கட்டுரைகளும் ஒன்றுக் கொன்று முரண்பட்டு நிற்கின்றன, இந்த தசாவதாரக் கட்டுரைகளைப் பற்றிய மொத்தமான விமர்சனத்தை மட்டும் இந்த இதழில் கூறிவிட்டு — அடுத்து வாரந்தோறும், ஆச்சாரியாரின்- அதாவது சக்ரவர்த்தியாரின், திருமகனைப்பற்றி—ஆச்சாரியாரைப்பின் தொடர்ந்து-அவர் எப்படி யெப்படி வளைவான பாதைகளில் போகிறார், தம் இனத்தை வாழ்விக்க — என் பதைக் கண்டு, அப்படிக் கண்டதை அவ்வப்போது உங்களுக்கு முரசொலி அறிவிக்கும்.

*சகல சிறப்போடும் நடைபெற்று முடிந்தது தசரதன் செய்த அஸ்வமேதயாகம். அப்போது தசரதன் மனைவியர் அருந்துமாறு தவபாயசம் அருளப்பட்டது. தசரதன் துணைவியர் மூவரும் தேவ பாயசத்தை பங்கு போட்டு அருந்திக்கருவுற்றனர். அதை விவரிக்கிறார் ஆச்சாரியார்; படியுங்கள்!*

"பாயசத்தில் அருந்திய பங்கின் விகிதாசாரப்படி இந்த நான்கு குமாரர்களுக்கும் விஷ்ணு அம்சம் சொல்லப்படுகிறது. முறையே ராமன் விஷ்ணுவில் பாதியென்றும், லக்ஷ்மணன் விஷ்ணுவில் கால் பகுதி என்றும், பரதனும் சத்ருக்கனனும் ஒவ்வொருவரும் அரைக் கால் பங்காகவும் சொல்லப்படுகிறது."

ஜூன் 6-ம் நாள் கல்கி இதழில் சக்கரவர்த்தி திருமகன் கட்டுரையில் ஆச்சாரியார் எழுதிய வாசகங்கள் மேலே இருப்பவை. ஜூன் 6-ந்தேதி கட்டுரைக்கு அதே ஆச்சாரியார் மே மாதம் 23-ந்தேதி பதில் சொல்லியிருக்கிறார். இராமன் விஷ்ணுவின் அவதாரம் என்று ஜூன் 6-ல் கூறுகிறார். 15 நாள் முன்னதாக ராமன் அவதாரமா என்ற வினாவுக்கு விடையளித்திருக்கிறார். படியுங்கள் அதையும்.

"வால்மீகி ராமாயணத்தில் காணப்படும் ராமன் ஒரு சிறந்த ராஜகுமாரன். வீரபுருஷன். அபூர்வமான குணங்கள் பெற்றவன். அம்மட்டே; கடவுள் அல்ல."

"வால்மீகி ரிஷியின் காவியத்தில் இராமன் ஒரு மகா புருஷன். ஈஸ்வர அவதாரமாக வைத்து எழுதவில்லை."

(மே. 23, கல்கியில் ஆச்சாரியார்)




சக்கரவர்த்தி திருமகன் ஒரே தொடர்கட்டுரை. ஒருவரே எழுதுகிறார்—அவரும் ஒரு சக்ரவர்த்தி—அவரே மே 23-க்கும் ஜூன் 6-க்குமிடையே இந்த அளவுக்கு முரண்படுகிறார். ஜூலை 18 ம் நாள் கல்கியில் அவரது கட்டுரையில் குறிப்பிடுவதாவது:

"தமிழர்களுக்கு, நீங்கள்தான் புராணத்தில் அரக்கர் என்று சொல்லப்பட்டவர்கள்" என்கிற புதுப்பட்டம் அளிப்பதற்குப் பழைய தமிழ் நூல்களில் ஆதாரம் எங்கும் இல்லை. அவர்களைத் தமிழர்கள் என்றும்-தம் முன்னோர்கள் என்றும், சிலர் இக்காலத்தில் அறிவீனமாக எண்ணியும் பேசியும் வருவது பரிதாபம்."

*அரக்கர் எனக்கூறப்பட்டவர் தம் முன்னோரே என்று எண்ணியும் பேசியும் வருவது அறிவீனமாம்! அறிவீனமாம் தோழர்களே அறிவீனமாம்! அறிவுக் கடல் எனத் தன்னை எண்ணியிருக்கும் அகந்தை நிறை ஆச்சாரியார் கூறுகிறார்: அறிவீனமென்று! அவருக்கு பண்டித நேருவின் மொழிகளையே பதிலாகத்தர விரும்புகிறேன்.*

"உண்மையை உரைக்குமிடத்து, ராமாயணக் கதையானது ஆரியர்கள் தென்னாட்டின் மீது படை எடுத்துச் சென்றபோது அவர்களுக்கும் திராவிடர்களுக்கும் நடந்த சண்டையைப் பற்றிக் கூறுகிறதென்று சொல்லலாம். மகாபாரதம் ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் நடந்த சண்டையைப்பற்றிச் சொல்லவில்லை. ஆரியர்களுக்கும் ஆரியர்களுக்கும் நடந்த சண்டையைப்பற்றிதான் அது சொல்கிறது." "தென்னிந்தியாவில் இன்றைக்கும் திராவிடர்களே வசித்து வருகின்றனர்."

**முக்காடு**

*1928-ம் ஆண்டு பண்டித நேரு, இமாலயத்தில் மசூரியில் இருந்த தனது மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார். "ஜவாஹர்லால் நேருவின் கடிதங்கள்" என்ற புத்தகத்தில் இந்த உண்மைகளைக் காண முடியும். ஆச்சாரியார் என்ன சொல்லுகிறார் — ஆசியஜோதியாம் — அவரது தலைவராம் — நேருபண்டிதரும் அறிவீனத்தின் பாற்பட்டவரே என்று கூறமுன் வருவாரா? — அல்லது தான் விரிக்கும் பொய்மை வலையை தானே அறுத்து விடுவாரா?— இன்னும் கவனியுங்கள் ஆச்சாரியார் முரண்படும் விதங்களை!*

"முற்றிலும் வால்மீகியே கொடுத்த பாத்திரம் ராமனும் ராவணனும்! ராவணனைப் பற்றி வேறு கதையோ சரித்திரமோ இருந்ததா? இல்லை. வால்மீகிக்கும் முன்னதாக யாரேனும் ஒரு புராணமோ, பாட்டோ, சரித்திரமோ, அல்லது கல் சாசனமோ எழுதியிருந்து அதில் விஷயங்கள் வேறுவிதமாக எழுதியிருப்பதைக் காண்கிறோமா? இல்லை.'

*இது ஜூலை 18ம் நாள் ஆச்சாரியாரின் எழுத்து—இதே ஆச்சாரியார், மே 23ந் தேதி எழுதுவதையும் கூர்ந்து கவனியுங்கள்.*

"வால்மீகி ரிஷியானவர், ராமாயணம்பாடுவதற்கு முன்னமேயே அதாவதுபுராதனகாலந்தொட்டே —சீதாராம சரித்திரம் மக்களிடையே எழுத்து வடிவம் பெறுமலே, பல நூற்றாண்டுகள் வாய்வழிக்கதையாக வழங்கிவந்திருப்தாகத் தோன்றுகிறது. கர்ண பரம்பரையாகமுன்னமேஇருந்த ராம சரித்திரத்தை எடுத்துக் கொண்டு, அதற்கு வால்மீகி பக

[ 7-ம் பக்கம் ]

Filmed as bound

## பெற்றோர்களுக்கு !

○

'முரசொலி'யில் அடுத்த இதழிலிருந்து "**பிறை வானம்**" என்ற பிள்ளைகள் பகுதி ஆரம்பமாகிறது. பகுத்தறிவூட்டும் சிறுகதைகள், வேடிக்கை நிகழ்ச்சிகள் அந்தப் பகுதியில் இடம் பெறுகின்றன.

"தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பார்கள்-அது ஒரு அளவுக்கு உண்மைதான். பிஞ்சு உள்ளங்களிலே பதிந்து விடுகிற கருத்துக்களை மீண்டும் மாற்றியமைப்பது சுலபமான காரியமில்லைதான். தாய்ப்பாலிலே, ஒரு குடும்பத்தின் கதையும் தேசத்தின் வரலாறும் அடங்கியிருக்கிற தென்பார்கள்.

சிவாஜி, வீரனாக மாறியது அவன் தாய் ஜீஜிபாயினால் தான்!

ஜப்பான் நாட்டுத் தாய்மார்கள் நவீன உலகத்தின் ஜோதி விளக்குகள்.

தமிழகத்தின் புறநானூற்றுத் தாய்மார்கள் சரித்திரத்தின் பொன் வரிகள்.

தாயும், தந்தையும் காட்டுகிறவழி நேரான வழியாக அமைய வேண்டும்.

**அஞ்சுகண்ணன்-பூச்சாண்டி--பேய் பூதம்** — போன்ற பயமுறுத்தல் விளையாட்டுக்களால் குழந்தை உலகம் கோழை உலகமாக வளர்ந்திடத்துவங்குகிறது. அதை மாற்றி அமைத்திட அறிவுலகம் விரும்புகிறது. அந்.. பணிக்கு முரசொலி துணைபுரிய விழைகிறது.

ஆகவே—அடுத்த இதழிலிருந்து வெளியாகும் "பிறைவானம்" என்ற பகுதியை உங்கள் வீட்டு செல்வங்களுக்கு, பிள்ளைக்கனி அமுதங்களுக்கு படிப்பதற்கு கொடுங்கள். "விளையும் பயிர் முளையிலே!" ஆம்--களையெடுத்து கழனியை வளப்படுத்துங்கள்! உங்கள் வீட்டுக் கண்மணிகள் நாடுகாக்கும் பொன் மணிகளாகத் திகழ வழி செய்யுங்கள் — அதற்குப் பிறைவானம், பெரிதும் பயன்படும்.

(ஆ.-ர்.)

# திடுக்கிடும் கதை

## கருணாநிதி

[குறிப்பு:-ஒரு சிறிய நகைச் சுவைத் துணுக்கை ஆதாரமாகக்கொண்டு இந்தக் கற்பனை தீட்டப்படுகிறது]

★

நியூயார்க் நகரத்தைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறோம், நேரே பார்த்திரா விட்டாலும்! அமெரிக்காவின் அழகுத் திருநகர் மட்டுமல்ல அகிலத்தின் எழில்மாடம் என்றெல்லாம் வர்ணிப்பர் நாடு சுற்றிகள்! வானத்தைத் தொடும் மாட மாளிகைகள் அங்கே உண்டு. உச்சியிலே எரிவது மின்சார விளக்கா, அல்லது நட்சத்திர மண்டலம் வரையிலே அந்த உப்பரிகை உயர்ந்து நிற்கிறதா என்ற ஐயப்பாடுகள் புதிதாகப் பார்க்கிறவர்களுக்கு ஏற்படுவது சகஜம். அத்துணை உயரம் பொருந்திய பல அடுக்கு மாடிகள் உள்ள ஹோட்டல் ஒன்றில் உச்சிப் பகுதியில் மூன்று நண்பர்கள் ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, அங்கே தங்கியிருந்தார்கள். அவர்கள் நகர் சுற்றிப் பார்க்க வந்தவர்கள். உயர்ந்த கட்டிடங்களுக்கு மேலே ஏறிச் செல்வதற்கு, "லிப்ட்" வழியாக கீழே வந்தால் அந்த மூவரும் நகரத்தின் சிங்காரப் பகுதிகளையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு, இரவு பத்து மணிக்கு மீண்டும் தங்களின் அறைக்கு திரும்புவது வழக்கம். இப்படி சில நாட்கள் மூவரும் நியூயார்க்கின் நேர்த்தியை ரசித்துக் கொண்டிருந்தார்கள். ஒருநாள் அவர்கள், வேடிக்கை விநோதங்கள் விசித்திரகேளிக்கைகள் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு தங்கள் ஹோட்டலுக்குத் திரும்பினார்கள். கீழ்த்தளத்திலுள்ள ஹோட்டல் மானேஜர் அவர்களைப்பார்த்து வருத்தமுடன்" ஒரு செய்தியைச் சொன்னார். அதாவது;

"அன்புள்ள நண்பர்களே! இன்று நீங்கள் உங்கள் அறைக்கு நடந்துதான் போக வேண்டும், ஏனெனில் நமது "லிப்ட்" கெட்டுவிட்டது. அதற்காக வருந்துகிறேன், என்பதுதான் அந்தச் செய்தி. உண்மையிலேயே அது வருத்தமான செய்திதான். லிப்ட்டில் ஏறிஉட்கார்ந்தால் சில நிமிடங்களில் எந்தத் தொல்லையுமின்றி குறிப்பிட்ட இடத்திற்கு அவர்கள் போய்விட முடியும். லிப்ட் கெட்டுவிட்ட காரணத்தால்—இப்போது அவர்கள் கடக்க வேண்டிய மாடிகள் பல! ஏற வேண்டிய படிகள் இரண்டாயிரத்துக்கு மேல் இருக்கும். ஊரெல்லாம் சுற்றி காலெல்லாம்அலுத்துப் போயிருக்கிற அவர்கள் அவ்வளவு படிகளில் ஏறி, மாடிகளைச் சுற்றிச் சுற்றி, தங்களின் அறைக்குப் போவதென்றால் சாமான்யமா? என்ன செய்வது—போய்த்தானே தீர வேண்டும். மூவரும் படிகளில் ஏறிப்போக தீர்மானித்தார்கள். அதோடு அலுப்புத் தெரியாமல் இருக்க ஒரு புதிய உற்சாகமான ஏற்பாடும் செய்து கொண்டார்கள். தங்கள் அறையை அடைவதற்குள், வழியில் மூவரும் ஆளுக்கு ஒரு கதை சொல்வதென்று முடிவு கட்டினார்கள். அதன்படி முதல் கதை ஒரு காதல் கதை!—அந்தக் கதையை ரோமியோ என்பவன் சொல்ல வேண்டும். அடுத்த கதை வீரக் கதை. அதை ஆண்டணி என்பவன் சொல்ல வேண்டும். மூன்றாவது திடுக்கிடும் கதை. அதை சார்லஸ் என்பவன் சொல்ல வேண்டும். அதன்படியே முதலில் ரோமியோ காதல் கதை கூற ஆரம்பித்தான்.

### காதல் கதை

பாபிலோன் நகரம் செல்வத்திருநகரம். அங்குதான் நான் சொல்லப்போகும் கதையின் பாத்திரங்கள்வாழ்ந்தார்கள்; ஓவிட் என்பான் இதை அழகாக எழுதியிருக்கிறான்.

இரட்டைக் குழந்தைகளைப் போல இரண்டு வீடுகள் ஒட்டிக் கொண்டிருந்தன. ஒற்றைக்கல் சுவர் ஒன்று அந்த வீட்டை பிரித்து வைத்தது. அதில்தான் இரண்டு நெஞ்சு இணைந்த காதலர்கள் வாழ்ந்தார்கள். திஸ்பே ஒரு அலங்காரத் திருஉருவம்; பைரமஸ் ஒரு ஆணழகன். கருத்தொருமித்த அவர்களுடைய காதலை மூடி மறைக்க அவர்களுடைய பெற்றோர்கள் முடிவுசெய்தனர். வெம்பிய உள்ளத்தினராய் இல்லத்துக்குள்ளேயே வாடி வதங்கினார்கள். அதற்கு அந்தக் களிமண் சுவரோ உணர்ச்சிக்கு இடப்பட்ட வேலியாக இருந்து வேலை பார்த்து வந்தது.

யானையின் கண்களைவிட காதலர்களின் கண்களுக்குத்தான் கூர்மை அதிகமாயிற்றே! அந்தச் சுவற்றிலே இருந்த ஒரு பொந்து அவர்களுடைய கவனத்தை ஈர்த்தது. அவ்வளவுதான்!

நேரம் — காலம் இன்னதென்று பாராது திஸ்பேயும், பைரமசும் 'குசுகுசு' வென்று காதலுரையாட ஆரம்பித்தார்கள். சுவற்றின் ஒருபக்கத்திலே பைரமஸ் வார்த்தைகளைக் கொட்டி அவளை வர்ணித்தபடி நிற்பான். அதையெல்லாம் ஆமோதித்தபடி சுவற்றின் மற்றொரு பக்கத்திலே திஸ்பே மெய்மறந்து நிற்பாள். அந்திநேரமென்றும், அர்த்த சாமமென்றும் பாராது அவர்கள் இன்பக் கடலாடினார்கள்! இத்தனை நாட்கள் இரண்டு ஜோடிக்கிளிகளைப் பிரித்து வைத்திருக்கும் தடைக் கல்லாக நின்ற அந்தக் களிமண் சுவர் இப்போது தேக்கிய இன்ப வெள்ளத்திற்கு பெருங்கரையாக நின்று பேருதவி செய்தது. பொந்தின் இடையிலே காந்தச் சொற்களின் இன்னிசை எந்நேரமும் ஒலித்தபடி இருந்தது. அவர்களுடைய உதடுகள் உராய்ந்த தில்லை; ஆனால் எப்போதும் 'இச்' என்ற ஒலி மட்டும் மெல்லென அதிர்ந்து கொண்டே இருந்தது.

பெற்றோரை ஏமாற்றும் காதலராய் அவர்கள் எத்தனை நாட்கள்தான் வாழமுடியும்? வேறூர் சென்று திருமணம் செய்து இல்வாழ்வு நடத்த அந்த இளம் இதயங்கள் முடிவு செய்தன.

பாபிலோன் நகருக்குப் பக்கத்திலே நிநசின் சமாதி ஒன்று இருக்கிறது. அதன் அருகிலே நிற்கும் மல்பெரி மரத்தின் பக்கத்திலே இரவு நேரத்தில் இருவரும் சந்திப்பது எனவும்—பின்னர் அங்கிருந்து கட்டுப் பாடென்னும் கோடரியால் வாலிபத்தை வெட்டிச் சாய்க்கும் பெற்றோரை விட்டுவிட்டு ஓடிவிட முடிவு செய்தனர்.

பெண்கள்தான் எப்போதும் அவசரக்காரர்களாயிற்றே! அதன்படி — குறிப்பிட்ட நேரத்தில் கள்ளரும் அஞ்சி நடுங்கும் நள்ளிரவைக் கண்டு உள்ளம் நலியாமல் திஸ்பே மல்பரி மரத்தடிக்கு வந்து சேர்ந்தாள். ஆனால் பைரமசை மட்டும் அங்கே காணவில்லை. அந்த இருட்டிலே பேதைப்பெண் அவள்,

[ 6-ம் பக்கம் ]

# தலையங்கம்

சென்னை [30—7—54] வெள்ளி

## விடுதலையார்—விபரீதபுரிப் பயணம்

"ஐந்து, ஆறு சிறுவர்கள் ராயபுரம் கட்டடத்தில் கூடிக் கொண்டு, எதற்கெடுத்தாலும் திடீர்க் கிளர்ச்சி என்பதும், ஏமாந்த மக்களைக் கிளப்பிவிட்டு துப்பாக்கிக்கு இரையாக்குவதும் அறிஞர்கள் என்போருக்கு அழகல்ல."

19-7-54 'விடுதலை' தலையங்கத்தில்தான் மேற்கண்டவாறு குறிப்பிடப் பட்டிருக்கிறது. பிள்ளையார் உடைப்புப் போராட்டத்தினால் எத்தனை இடங்களில் இரு தாப்பாருக்கும் கைகலப்பு ஏற்பட்டது; ரத்தப் பெருக்கு எடுக்கும் படியான அடிதடிகள் உண்டாயின; என்ற விபரங்களை படம் போட்டுக் காட்டிய விடுதலைதான் மேற்கண்டவாறு எழுதுகிறது. சென்ற இந்தி எதிர்ப்பின்போது, குடந்தைத் தெருவிலே குருதி மழை பொழிந்ததும் — பொதுமக்கள் தடியடிக்காளான கோரமும்—எந்த விடுதலை இதழில் விறு விறுப்போடு வெளி வந்ததோ; அதே இதழ்தான் இப்போது மேற்கண்டவாறு எழுதுகிறது. தாளமுத்து நடராசன் இந்தி எதிர்ப்புப் போரில் மாண்டுவிட்டார்கள் என்பதற்காக அந்த இயக்கத்தை நிறுத்திவிட முடிந்ததா ? என்பதை சிந்தித்துப் பார்க்காமல்—சீறிவிழ வேண்டும் என்கிற ஒரே நோக்கத்துடன், "சிறுவர்கள்" என ஏளனம் புரிகிறது. திராவிடர்கழக செயல் வீரர்கள் பலரைவிட வயதிலே மூத்தவர்கள்—இன்னும் சொல்லப் போனால் நிச்சயமாக, அவர்களைவிட வயதிலே குறையாதவர்கள் தான் தி. மு. கழகத்தின் செயல் வீரர்களாகத் திகழ்கிறார்கள் என்பதை விடுதலையார் மறந்தது ஏனோ? பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களே தி. மு. கழகத்தில் உறுப்பினராகலாம் என்ற விதி முறையைக்கூட விடுதலையாரின் கண்கள் சந்திக்காதது ஆச்சரியமே !

"மாற்றுக் கட்சிக்காரரை—நேரு, "நான்சென்ஸ்" என்று கூறியதற்காக ரயில் தண்டவாளத்தின் குறுக்கே படுத்து, 7, 8 அருமையான உயிர்களையும் வீணாகப்பலி கொடுத்து, ஊர் சிரிக்குமாறு நடந்து கொண்டது போதாதா ?"

இதுவும், விடுதலையின் வாசகம்தான் ! திருத்தணியில் நடைபெற்ற கிளர்ச்சியில் கலந்து கொண்டவர்களை நேரு, நான்சென்ஸ் என்று கூறினார். திருத்தணிக் கிளர்ச்சியில் தி. மு. கழக வீரர்கள் நூற்றுக் கணக்கில் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டு சிறைக்கும் சென்றிருக்கிறார்கள் என்பதை நாடு அறியும். நேரு, இன்னாரைத்தான் குறித்துச் சொல்கிறேன் என்று பிரித்துச் சொல்லவில்லை — தென்னாட்டு மக்களிடம் அடிக்கடி அவர் அது போன்ற காரமான சொற்களைத்தான் வீசி வந்திருக்கிறார். விடுதலையார் கூற்றுப்படி வேறுயாரையோ சொன்னதாகத்தான் இருக்கட்டுமே—மாற்றுக் கட்சிக்காகப் பரிந்து கொண்டு கிளர்ச்சி நடத்தியதானது, மாற்றுக் கட்சிக்காகப் பரிந்து கொண்டு தேர்தல் பிரச்சாரம் செய்வதைவிடவா மோசமாகி விட்டது என்று அன்போடு கேட்க ஆசைப்படுகிறோம்.

"கேட்பவன் முட்டாளாயிருந்தால், பேசுகிறவன் எதையும் பேசலாமென்றாகிவிட்டது. மகாமோசம்!"

இதுவும் விடுதலையின் தலையங்கப் பொன்மொழிதான்! ஆமாம் விடுதலையாரே! அப்படித்தான் ஆகிவிட்டது என்பதை வினயத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

காங்கிரஸ் என்ற பாம்பை அடிக்க கம்யூனிஸ்ட் என்ற தடியை உபயோகிக்கிறேன் என்று கூறியது ஒரு காலம். காங்கிரஸ் கூட பரவாயில்லை, கம்யூனிஸ்ட்தான் ஒழியவேண்டும் என்று பேசுவது தற்காலம்! அதோடா முடிந்துவிட்டது—சென்ற பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் ஜி. டி. நாயுடு அவர்களை ஆதரிக்காமல்—காமராசரின் மற்றொரு போட்டி அபேட்சகரான ஆறுமுகசாமி என்பவரை ஆதரித்தபோது—இந்த தி. மு. கழகத்தார், காமராசரிடம் கைக்கூலி பெற்று துரோகிகளாக மாறி விட்டார்கள் என்று சொன்னதும், இப்போது காமராசரின் தேர்தலுக்காக பிரச்சாரம் செய்ய ரத, கஜ, துரக, பதாதிகள் செல்வதும், திராவிடர் கழக தேர்தல் ஆபிஸ்கள் திறந்து தேர்தல் வேலை நடத்துவதும், பெரியார் படத்தைபோட்டு சுற்றிலும் காளைமாட்டுச் சின்னங்களை எழுதி, 'காமராசர் வெல்க' என முழங்குவதும்—மக்கள் மன்றத்தின் கவனத்திற்கும், சிந்தனைக்கும் வரமுடியாத விஷயங்கள்என்றா விடுதலையார் கருதுகிறார்? "கேட்பவன் முட்டாளாயிருந்தால் பேசுகிறவன் எதையும் பேசலாம்" என்கிற விடுதலை வாசகம் யாருக்குப் பொறுந்துகிறது என்பதை தயைகூர்ந்து சிந்தித்திட வேண்டுகிறோம்.

---

காமராசர் மந்திரி சபை, ஆணா-பெண்ணா-அலியா என இன்னும் தெரியவில்லை என்று அண்ணா அவர்கள் கூறியது கீழ்த்தரமான நடையாம்! விடுதலை கிண்டல் செய்கிறது! நாகராஜ அய்யரையும்—காமராஜ நாடாரையும் இணைத்து இணைத்து எழுதிய விடுதலை தான் இப்போது இது போலக் கூறுகிறது. மந்திரி சபையின் போக்கு பற்றி அண்ணா அவர்கள் கூறிய வார்த்தை மட்டும் விடுதலையாருக்கு கீழ்த்தரமாகத் தெரிகிறதாம்.

"கவர்னரின் சம்பளம் பார்லிமேண்டினால் நிர்ணயிக்கப் பட்டதாகும். ஒரு கவர்னரின் பதவிக்காலம் முடியும் வரையில், அந்தச் சம்பளத்தில் காலணாவைக் குறைப்பதற்குக் கூட யாருக்கும் அதிகாரம் கிடையாது"

இதுவும் விடுதலையில் மின்னும் தங்க எழுத்துக்களே தான்!

பார்லிமெண்டினால் நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்தை குறைக்க அதிகாரம் கிடையாதாம்!—காங்கிரஸ் ஏட்டிலே வர வேண்டிய வியாக்யானம் திராவிடர் கழக ஏட்டிலே வருகிறது. பார்லிமெண்டு என்பது என்ன?—மாற்ற முடியாத பகவானின் (?) படைப்பா? கடவுளின் பெயரால் அமைக்கப்பட்டுள்ள விதிமுறைகளையே உடைத்தெறிய வேண்டுமென்கிறோம் நாம். பார்லிமெண்டின் அதிகாரத்தை மாற்றுகிற அளவுக்கு ஏன் கிளர்ச்சி நடத்தக்கூடாது!


"இப்படிப் பேசுகிறவர்கள், இந்திய அரசியல் சட்டம், 158 (பி) (4) விதிகளைப் படித்துப் பார்க்கவேண்டும்"

விடுதலைதான அரசியல் சட்டத்தை சுட்டிக்காட்டி, கவர்னர் சம்பளம் குறைக்கப்பட வேண்டும் என்ற நமது கிளர்ச்சியைக் கிண்டல் செய்கிறது. அன்றொருநாள் அரசியல் சட்டத்தையே கொளுத்தப் போகிறோம் என்று ஆர்ப்பரித்துக் கிளம்பிய விடுதலையார்தான் இன்றையதினம் அரசியல் சட்டத்துக்கு அடங்கித் தீரதேண்டும் என்ற அருள் நெறித் திருஅற உபதேசம் செய்ய வருகிறார். இந்திய அரசியல் சட்டப்படி தேசிய மொழியாக்கப் பட்ட இந்தி எழுத்துக்களை யார் வேண்டுமானாலும் அழிக்கலாம் என்று அரசியல் சட்டம் கூறுகிறதா? பார்ப்பனர்களை வெளியேற்றச் சொல்வது சரிதான் என்று அரசியல் சட்டம் அறிவிக்கிறதா ? திராவிடநாடு என்று ஒரு தனி நாடாகப் பிரிப்பதற்கு நாம் நடத்துகிற கிளர்ச்சிகூட அரசியல் சட்டத்திற்கு இடிக்கிற கிளர்ச்சிதானே !

இதையெல்லாம் சிறிதும் உணர்ந்து பார்க்காத விடுதலையார், திராவிட முன்னேற்றக் கழகத்தை எப்படியும் தாக்கித் தீரவேண்டும் என்கிற ஒரே நோக்கோடு இதுபோன்ற விபரீதபுரிக்குப் பயணம் நடத்துகிறார் என்பதை எண்ணும்போது அறிவுலகம், கண்ணீர் வடிக்கத்தான் செய்யும்.

"படிக்கிறவன் . முட்டாளாயிருந்தால், எழுதுகிறவன் எதையும் எழுதலாம் என்று ஆகிவிட்டது" என்கிற விடுதலையாரின் குற்றச்சாட்டுக்கு அவரே ஆளாகிவிடுவதை எண்ணும்போது அவரது சொந்தப் பாசறையிலே இருப்பவர்கள்கூட மனம் நொந்து தான் போவார்கள். விடுதலையார், இத்தகைய் விபரீத புரிக்குப் பயணம் நடத்தலாமா என்பதை திராவிடர் கழகத்திலேயிருக்கிற பெரியவர்களும், ஆர்வமுள்ள இளைஞர்களும், பெரியாரிடத்திலே பாசம் வைத்துள்ள உண்மை வீரர்களும், சிந்தித்துப்பார்க்க வேண்டுமென்று மிகமிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம். இது ஒரு நிலைமை விளக்கமே தவிர; வேறல்ல! இந்த நிலையை விளக்கித்தீர வேண்டிய நெருக்கடிக்கு "விடுதலையாரின் விபரீத புரிப்பயணம்" நம்மைக் கொண்டு வந்து விட்டதற்காக மிகவும் வருந்துகிறோம். மீண்டும், திராவிடர் கழகத் தோழர்கள் அருள்கூர்ந்து சிந்திக்க வேண்டுகிறோம்.

# மறந்தேவிட்டாய்




மலைபடுத்துக் கொண்டிருக்க; அதன்மேல் ஈர
முகில் படுத்துக் கொண்டிருக்கும் சேர
[நாடே!

சிலை செதுக்கக் கல்தந்து; மாதர்க் கெல்லாம்
சித்திரம் போல் எழில் தந்து; நிதிகள்
[தந்து ;

இலை விரித்து, நிழல்திறக்கும் குளிர்பூஞ்சோலை
எப்போதும் உயிருள்ள நதிகள்; என்றும்

விலை வளர்க்கும் யானைப்பல்; அனைத்தும் தந்து
வருகின்றாய்; அதற்காக வாழ்த்து கின்றேன்!

★

கருவத்தால்; ஆணவத்தால்; நமைப் பழித்த
கனக-விசயர் என்னும் பூணூல் மன்னர்

சிரத்தின் மேல் கல் ஏற்றிக் காட்டி னனே
செங்குட்டு வன் என் போன்; அவனைப் போலே,

பரவுகின்ற புகழ் வளர்த்துக் காட்டும் வீரர்;
பகுத்தறிவைக் கொல்லாத கல்வி; சாதிப்

பிரிவுகளைப் பிணமாக்கும் சக்தி—தன்னைப்
பெருக்கவில்லை, அதற்காக வருந்து கின்றேன்!

2

வயல்கொடுக்கும் செந்நெல்லை உணவாய் மாற்றி
விருந்து வைத்துக் கொண்டிருக்கும் சோழ நாடே!

வெயில் பார்க்கும் தாமரையைக் குளத்தில் வைத்து;
வானத்தில் மழை வைத்து; பெய்ய வைத்து;

தபவை எதிர் பார்க்காத பொன்னி ஆற்றைத்
தரைமீது ஓடவைத்துத்; தொழில்கள் வைத்து;

குயில் வளர்த்துக், கலை வளர்த்துப் பெருமை தேடிக்
கொடுக்கின்றாய்; அதற்காக வாழ்த்து கின்றேன்!

★

கரிகாலன் அரசாண்ட நாட்டில், இன்று
கயவர்களை, அமைச்சர்களாய் நியமிக்
[கின்றாய்;

எரிகின்ற நெருப்பின்மேல், புராண ஏட்டை
இழுத்தெறிய மலைக்கின்றாய்; பக்தர் மூலம்

வருமானம் தேடுகின்ற கடவுள் தன்னை
வீதியிலே பவனிவரச் செய்கின் றாய் நீ;

இருள் துரத்த விளக்கெடுத்தால், அதை அணைப்பாய்
என்கின்றாய்; அதற்காக வருந்து கின்றேன்!

3

பழச்சாறு போல் இனிப்பு ஊட்டும், சங்கப்
பாடல்தனை வைத்திருக்கும் பாண்டி நாடே!

மொழி வளர்க்கும் கலைஞர்களைப் புகழ்ந்தாய்; வெள்ளை
முத்துக்கள் தனை ஈந்தாய்; கைசி வந்தாய்;

இழிந்த செயல் புரிந்தவனைக் கொன்று, அன்னோன்
இரத்தத்தில் கொலைவாளைப் படுக்க வைத்தாய்.

விழி, முடிவு செயும் காதல் திரும ணத்தை
வளர்த்திட்டாய்; அதற்காக வாழ்த்து கின்றேன்!

★

சக்கரை போய் கரும்பின்மேல் மோத; அந்தச்
சமயத்தில் தேன் வந்து சேர்ந்து கொள்ளும்,

முக்கூட்டுச் சுவை போன்ற தமிழைக் காக்க,
முன்போல நீ, சங்கம் அமைக்கவில்லை.

நக்கீரன் போன்றவனை மீண்டும், இந்த
நாட்டுக்கு அளிப்பதற்கு மறந்தே விட்டாய்.

தக்கைகளைப் பெற்றெடுத்து, மனிதர் என்று
தருகின்றாய்; அதற்காக வருந்து கின்றேன்.

★

"படுத்திருக்கும் வினைக் குறிபோல் மீசையுண்டு தமிழ் வளர்த்த பாண்டியர்க்கு" என்று ஒரு முறை கூறி கவிதா மண்டலத்தின் பாராட்டுதலை பெற்ற, தோழர் சுரதா-பாரதி தாசனின் நேர் பரம்பரையைச் சேர்ந்தவர். அவரது மாணவருங்கூட! வளமான சொற்கள் சுரதாவின் கவிதை வரிகளில் பொங்கி வழிவதை நாம் காண முடியும். பாரதியார் முதலிய பழைய தமிழ்ஏடுகளை பக்கத்திலே வைத்துக் கொண்டு பாட்டெழுதும் பழக்க முடையவரல்ல. பல நாட்கள் காலத்திரையால் மறைக்கப்பட்டிருந்த அந்த நண்பரின் கவிதைகளை வாரந்



தோறும் நீங்கள் சுவைக்கலாம். கவிதை யழகைக் காணுங்கள்—**"விழி, முடிக்கும் காதல் திருமணம்"** என்று குறிப்பிடுகிறார்—ஆகா—புரோகிதரின் ஜாதகம் முடிவு செய்யும் திருமணமல்ல; தரகர்கள் பேசி முடிக்கும் திருமணமுமல்ல, பெற்றோரும் குறுக்கிட்டு முடிப்பதல்ல; விழிகளே முடித்து விடுகிறதாம்---இதுபோன்ற பொருள் ததும்பும் நீண்டவாக்கியங்களை ஒரே வார்த்தையில் சொல்லும் முறை சுரதாவுக்கு தனிப்பண்பு

(ஆ. ர்.

# ஓணான் பழிக்கிறது; :: உதய சூரியனை!

அன்புள்ள குமார்,

தொடர்ந்து உனக்கு கடிதம் எழுதினால் தொல்லையாக இருக்குமோ என்று எண்ணித்தான் இரண்டு வாரமாகக் கடித மெழுதாதிருந்தேன். குழந்தைகளின் மழலை மொழி, இன்ப ஜோடிகளின் இதழ் முத்திரை—இவைகளே, அளவுக்கு மீறினால் வெறுப்புத் தட்டிவிடும் என்று காவியகர்த்தாக்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்— நண்பனின் கடிதம்—அதுவும் வாழ்க்கையை அரசியலோடும் இலக்கியத்தோடும் பின்ன விட்டுவிட்ட வாலிப நண்பனின் கடிதம் வெறுப்புத் தட்டாமலா இருக்கும் என்ற அச்சம்தான் எனது இருவார மௌனத்திற்குக் காரணம்!

நேற்று உன் கடிதம் கிடைக்கப் பெற்றேன். மகிழ்ச்சி. பெருமகிழ்ச்சி. எங்கே, நீ வாயில்லா பூச்சியாகப் போய் விடுகிறாயோ, வைரமோதிரம் கையிலே ஜொலித்தால்போதும்; வையகமாளுகிற கட்சிக்கு கை தூக்கி வாழ்ந்துவிடுவோம் என்ற சபலம் உன் உள்ளத்தில் வேரூன்றி விட்டதோ என்று நினைத்தேன். அந்தஎண்ணத்தை நேற்றைய கடிதம் தற்கொலை செய்து கொள்ள வைத்து விட்டது. அரசியல் தெளிவு பெற வேண்டுமென்ற ஆசை— மாற்றாரோடு எண்ணப்போர் நடத்தவேண்டுமென்ற வேட்கை உன்னிடமும் துளிர்விடத் தொடங்கியிருக்கிறது. அந்த நன்நோக்குவாழவேண்டும்; வளர வேண்டுமென்பதுதான் எமது ஆசையும்.

"காங்கிரஸ் மகாசபையை மட்டிலும் குறைகூறுகிறீர்களே; உங்கள் இயக்கத்தில்—திராவிடர் கழகத்திற்கும், தி. மு. கழகத்திற்கும் உள்ள பிணக்கை உங்களால் தீர்க்க முடிந்ததா? 19-7-54ம் தேதிய 'விடுதலை' இதழில் தீட்டியுள்ள தலையங்கத்தைப் படித்துப்பார்த்து அதற்கு பதில் சொல்லிவிட்டு காங்கிரஸ் கட்சிக்கு வாருங்கள்"

என்று உன் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறாய். அன்பு நண்ப, என்னுடைய தலைவர் அண்ணாவின் குணத்தை நீ அறிய மாட்டாய். விஷச் சொற்கள், வேலினும் கூர்மையான சுடுமொழிகள் எம்முனையிலிருந்து தாக்கினாலும்; கண்ணுக்கெதிராக வந்தாலும், கல்லின் மறைவிலிருந்து வாலியை மாய்த்த ஸ்ரீராமனின் முறையைப் பின்பற்றிவந்தாலும் அவைகளை புன்னகையால் புறமுதுகிட்டு ஓடச் செய்யும் சக்தி எம்மவரிடம் உண்டு. இதில் எவ்வளவு உண்மை மறைந்து கிடக்கிறது என்பதை சுயமரியாதை இயக்க வரலாற்றைப் படித்திருந்தால் நன்கு புலப்படும் உனக்கு.

குமார், அரபிநாட்டு அரண்மனைப் பூங்காவிலுள்ள அத்தனை மலர்களும் அழகு நிறைந்தவைகள்தான். அதிலும், பாரிஜாதத்தைத்தோற்கடித்து, பவழ மல்லிகையை தலைகுனியச் செய்து, வெண்நுரையைவெட்கத்துக்குள்ளாக்கி பூத்துக் குலுங்கி நிற்கும் வெள்ளை ரோஜாவைப் பறிக்கும் ராஜகுமாரியிடம், "அரசகுல நங்காய், முள் நிறைந்த அந்த வெண்மலர்தானா உன் நெஞ்சைக் கவர்ந்தது?

## பொன்மழையின் கழகம்

என்னைப்பார், ரத்தினச் சிவப்பு மேனி, சுருண்ட உன் கூந்தலில் என்னைச்சொருகிப்பார்'உலகமே சொக்கிவிடும்பெண்ணே' என்று செவ்வரளிப்பூ சொன்னால் — அன்னப் பறவையின் செவ்வண்ணப் பாதங்களைப் பார்த்து கிண்ணிக்கோழி பொறாமையால் சிலிர்த்தால் சிறகடித்தால், நீ அவைகளை அப்படியே நம்பத்தான் செய்வாயா? திட்டப்படுகிறவர்கள் தீயவர்கள் என்று நீ நினைக்கிறாய்? அது தகாத முடிவு தோழனே, தகாத முடிவு!

"படித்தவர்கள் படிக்காத தற்குறிகளைப் போலவும், அரைகுறையாகப் படித்த தற்குறிகள் சகலகலாவல்லவர்களைப் போலவும் பேசத் தொடங்கிவிட்டனர். சினிமா நடிகர்களும் சாதாரண கூத்து மேடை தொழிலையுடையவர்களும் கல்லூரி மாணவர்களின் இலக்கிய மன்றங்களுக்கு தலைமை தாங்கி அறிவுரை கூறுகின்ற காலமாகிவிட்டது! எந்த நாகரீக நாட்டிலும், இந்தக் கோலத்தைக் காண முடியாது. கலைஞர்கள் எஞ்சினீயரிங் கல்லூரிகளிலும் நகைச்சுவை மன்னர்கள் பி. ஏ; எம். ஏ; பட்டப்படிப்புக் கல்லூரிகளிலும் பேசிவருகின்றனர். செக்கு ஓட்டும் தொழிலாளி வக்கீல் சங்கத்தில் சொற்பொழிவாற்ற வேண்டியதொன்றுதான் பாக்கி"

இவ்வாறு விடுதலை தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பது உங்களைத் தானே என்று நீ கேட்டிருக்கிறாய். அன்றைய தலையங்கமே எங்களுக்காகவே எழுதப்பட்டது என்ற காரணத்தாலும், கலைத்துறையில் பெரும் பங்கு ஏற்றிருப்பது நாங்கள் தான் என்பதாலும், மேலே குறிப்பிட்டிருப்பது 'உங்களைத்தானே' என்று நீ கேட்டிருக்கிறாய். அது யாரைக் குறித்து எழுதியிருந்தாலும் எனக்குக் கவலையில்லை. அதிலேகுறிப்பிடப்பட்டிருக்கும் குதர்க்கவாதம் உலகம் ஏற்றுக் கொள்ளக் கூடியதுதானா? புத்தியுடையோர், சிந்தனா சக்தியுடையோர் அதை ஒப்புவார்களா? என்பதே என்வாதம்.

இன்னும் சொல்லப்போனால் அந்தத் தலையங்கத்தார் தெரிந்தோ தெரியாமலோ—பெரியார் ராமசாமி அவர்களையும், பிரதமர் காமராசரையும் தாக்கியிருக்கிறார் அரைகுறையாகப் படித்ததற்குறிகள் சகலகலா வல்லபர்களைப் போலப் பேசத் தொடங்கி விட்டனர் என்ற அந்த விஷ வாசகம், வைதீக வாசகம், வர்ணாஸ்ரம வாசகம், பெரியாரையும், காமராசரையும் தாக்குவதற்காகத் தானே வீசப்பட்டிருக்கிறது. கொஞ்சம் கூர்மையாக படித்தால் உனக்கு அந்த உண்மை புலனாகும்—

படித்தவனும் பட்டம் பெற்றவனுமே கல்லூரிகளில் பேசலாம் என்று வாதிடக்கூடிய அந்தப் பத்திரிகையாளர், மூன்றாம் வகுப்பு மட்டுமே படித்த பெரியார் ராமசாமி சேலம் கல்லூரியிலே 'தத்துவம்' பற்றிப் பேசியதையும், பிரதமர் காமராசர் அண்மையில் நியூகாலேஜில் பேசியதையும் மறந்துவிட்டார் என்றா கருதுகிறாய்? படிக்காதவர்கள் கல்லூரிகளில் தத்துவார்த்தம் பேசுவதும், படிக்காதவருக்குப் பரிந்து பச்சைத் தேர்தல் பிரச்சாரம் செய்வதும் எந்த நாட்டிலும் நடைபெறாத அலங்கோலமில்லையா?

குமார், நடிகர்கள் என்றால் அவ்வளவு கேவலமானவர்களா? முத்தமிழில் முடியமைக்கும் கடைத்தமிழாம் கூத்துத் தமிழை வளர்ப்பவர்கள் அவ்வளவு மட்டமானவர்களா? லாபுஸ்ஸயர் என்ற பிரான்ஸ் நாட்டுக் கோமாளி நடிகன், பெரும் பெரும் மேதைகளையெல்லாம் மக்கள் கட்சிக்கு இழுத்து வந்த வரலாறு உனக்குமா மறந்து போய்விட்டது?

நாம் இருவரும் பள்ளி இறுதி வகுப்பில் படிக்கும்போது இஷ்டப் பாடமாக எடுத்துப் படித்த மேல்நாட்டு வரலாற்றை ஒருமுறை நினைவுக்குக் கொண்டு வந்துபார். எத்தனை சர்வகலா சாலைகளில் படிக்காத கவிஞர்களின் சிலை சமைத்து வைத்திருக்கிறார்கள். பேரறிஞன் பெர்னாட்ஷாவும், பெருங்கவிஞர் ஷேக்ஸ்பியரும்பட்டம் பெற்றுத் தான் காவியம் புனைந்தார்களோ? எதையும் சிந்தித்து முடிவு கட்டு குமார்.

கலைஞன் என்றால் கல்லூரியில் பேசக்கூடாது என்று விதி இருக்கிறது! குமார், நீயேசொல், விடுதலையின் அந்தவாதம் பொறாமையால் எழுப்பப்பட்ட பொய் மாளிகையா இல்லையா என்று!

"செக்கு ஓட்டும் தொழிலாளி வக்கீல் சங்கத்தில் சொற்பொழிவாற்ற வேண்டியது ஒன்றுதான் பாக்கி" என்று விடுதலை எழுதியிருக்கிறதே — அப்படியானால் அப்பன் தொழிலை மகன் செய்ய வேண்டுமென்ற ஆச்சாரியாருக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டிருக்கிறாய். விடுதலை செய்யும் தவறை வைத்து எங்கள் கொள்கையை எடைபோடாதே! எங்களை மட்டுமல்ல; விடுதலை எழுதும் இம்மாதிரி முரண்பட்ட கருத்துக்களை வைத்து பெரியாரைப் பற்றியும் அவசரமாக ஒரு முடிவுக்கு வந்து விடாதே! அவருக்குத் தெரியாமலே அவர் நிழலில் அமர்ந்து அவருக்கே பலர் குழி பறித்துக் கொண்டிருக்கிறார்கள் —என்ன செய்வது!

பெரியார் சொல்வாரா அப்படி! —செக்கு ஓட்டுகிறவன் வக்கீல் சங்கத்துக்கு வரக் கூடாதென்ற செந்தேள் மொழி பெரி

[ 7-ம் பக்கம்

# திடுக்கிடும் கதை....

[ 2-ம் பக்க தொடர்ச்சி ]

அவளை எங்கே தேடுவாள்? காற்றிலே புழுதி பறக்கும் ஓசை கூட பைரமசின் பாத ஒலியாகத்தான் தோன்றியது, அந்தப் பாவைக்கு! "ஓ" வென்ற ஒலி அலை கேட்டு திஸ்பே திரும்பினாள்.

புள்ளிமானை கொன்று போட்ட பெண்சிங்கம் ஒன்று இரத்தம் வழியும் நாக்கை சப்புக் கொட்டியவாறு வந்து கொண்டிருந்தது. பாவம்! திஸ்பே நடுநடுங்கி விட்டாள். பாயவரும் சிங்கத்தின் பார்வையை மறைத்து உயிரைப் பாது காத்துக் கொள்வதற்காக அந்தப் பாவை, தன் மார்பகத்தை மூடியிருந்த மேலங்கியைத் தூக்கி எறிந்து விட்டு ஒரே நொடியில் ஓடி விட்டாள்! காற்றிலே மிதந்து வந்து தன் முகத்தை மறைத்த மேலங்கியை தன் கூரிய நகங்களால் பிராண்டி—இரத்தக் கரைபடிந்தபற்களால் கிழித்து எறிந்துவிட்டு தன் குகைக்கு நடைபோட்டது அந்தக் கிழட்டு சிங்கம்!

காதலியைக் காக்க வைத்த பைரமஸ், சிங்கம் அப்பால் நகர்ந்த பின்புதான் அங்கு வந்து சேர்ந்தான். காதலியைத் தேடினான்; தேடினான்! ஆனால் அவனோ திஸ்பேயின் இரத்தம் தோய்ந்த மேலங்கியையும், சிங்கத்தின் பாதச் சுவடுகளையும்-தான் பார்க்க முடிந்தது.

உள்ளம் வெடிக்க, உடல் துடிக்க அவன் சோகப் பெருங் கூச்சலிட்டான். "தாமதித்து வந்ததால் என் தாரத்தை இழந்தேனே! சிங்கத்தால் நீ சாகவில்லை. கண்மணியே! என்னால்தான் நீ இறந்தாய். நள்ளிரவில்—நடுக்காட்டில் இளையவளாம் உன்னை தனியாக வரச்சொல்லி நானேதான் உனைக்கொன்றேன்" என்றெல்லாம் புலம்பி, தன் உடைவாளை மார்பிலே பாய்ச்சிக் கொண்டு—திஸ்பேயின் மேலங்கியை அணைத்தபடி மண்ணிலே சாய்ந்தான், அந்த வனப்பு கொள் வாலிபன்!

இந்நேரம் காதலன் வந்திருப்பான்; கண்காணாச் சீமை சென்று காதல் வாழ்வுநடத்தலாம் என்றெல்லாம் மனக் கோட்டைகட்டியபடி திஸ்பே மல்பரி மரத்தடிக்கு வந்தாள். அய்யகோ! அவள் கண்ட காட்சியை அவளால் நம்பவே முடியவில்லை. இதயராஜாவின் இருதயத்தை கூர்வாள் கௌவிக் கொண்டிருந்தது. திஸ்பே உடன்தாவி காதலினின் மெய்தழுவி "அன்பே உன்னுயிர் குடித்தது கொடுவாள் அல்ல; நான்தான் உன்னைக் கொன்றேன்; என் மீது உனக்குள்ள வற்றாத காதல்தான் உன்னைக் கொன்றது"! — என்று அழுது, பைரமசின் நெஞ்சிலே பதிந்திருந்த வாளை எடுத்து தன் மார்பிலே பாய்ச்சிக் கொண்டாள். உற்றாரின் கட்டுப்பாட்டிற்கும்—ஊராரின் கண்டனத்திற்கும் ஆளாகி, உள்ளம் நொந்து புதுவாழ்வு நடத்தச் சென்ற காதலர்கள் நிநசின் சமாதிக்கு அருகிலே பிணமாகச் சாய்ந்து கிடந்தார்கள். சமுதாயம் சேர்த்து வைக்காத ஜோடிகளை மரணம் தன் இருட்கரங்களால் இணைத்து வைத்தது! ஆனால் ஒன்று! மல்பரி மரத்தடிக்கு, தாமதமாக வந்து திஸ்பேயை வாட்டிய பைரமஸ், சாக்காடென்னும் பூக்காட்டிற்கு முன்னமேயே சென்று தன் ஆருயிரைத் தேடிக் கொண்டிருந்தான்.

இந்தக் கதையைக் கூறிய ரோமியோவும் மற்ற இருவரும் கதையிலேயே லயித்து, ஆயிரத்துக்கு மேற்பட்ட படிகளைக் கடந்தனர். ஏற வேண்டிய தூரம் இன்னும் சிறிது இருக்கிறது. தீர்மானப்படி ஆண்டனி வீரக் கதையை சொல்லத் தொடங்கினான்.

### வீரக்கதை

"ரோமியோ காதல் கதை என்ற பெயரால் உண்மையிலேயே ஒரு காதல் கதை சொன்னான்—நான் வீரக்கதை என்ற தலைப்பில் ஒரு விசித்திரக் கதை சொல்லப் போகிறேன்; மிக சுருக்கமாக! கேளுங்கள் இருவரும்!

அடிமை வியாபாரத்தை எதிர்த்து பெரியதொரு கிளர்ச்சி ஏற்பட்டதல்லவா! அதுபோலே ஒருகிளர்ச்சி-- வேறு ஒருஉரிமையைக் காப்பாற்றுவதற்காக நடைபெற்றது. அந்தக் கிளர்ச்சி எந்த ஊரில் நடந்தது என்றெல்லாம் கேட்காதீர்கள். கிளர்ச்சிக்கு தலைமை வகித்தவர் பெயரும் தெரியாது. கிளர்ச்சியின் நோக்கம் என்ன வென்றால்; அந்த ஊரில் உள்ள ஒரு ஜாதிக் கூட்டத்தாரை ஊரைவிட்டே விரட்ட வேண்டும் என்பதுதான்! அந்த ஜாதிக் கூட்டத்தாரின் தலைவன்தான் அந்த ஊரையே பரிபாலித்து வந்தான். தலைவனின் ஜாதியை விரட்ட வேண்டுமென்று கிளர்ச்சித் தலைவர் ஆக்ரோஷமாகப் பேசி வந்தார். அப்படி அந்த ஜாதியார் ஓடா விட்டால் — அவர்களைக் கண்ட இடத்தில் கொன்று போடவேண்டு மென்று கர்ச்சனை செய்தார். அந்த ஜாதித் தலைவன் மிகவும் தந்திரசாலி. அவன் தன்னுடைய சூழ்ச்சியைப் பயன் படுத்தி, கிளர்ச்சிக்காரர்களின் ஜாதியிலே பிறந்த ஒருவரைப் பிடித்து, அந்த ஊருக்குத் தலைவனாக்கி விட்டான். அந்தப் புதுத்தலைவன், கிளர்ச்சிக்கார தலைவரைக் கூப்பிட்டு, "நீர் இனிமேல் இந்த ஊரைவிட்டு யாரையும் துரத்துவதாகவோ —அல்லது அவர்களை பயமுறுத்தும் வகையிலோ பேசக்கூடாது. அப்படிப் பேசினால் உம் மீது கடும் நடவடிக்கை எடுப்பேன்" என்று கூறி விட்டான். புதுத்தலைவனின் மிரட்டலைக் கண்ட கிளர்ச்சித் தலைவர், உடனே, "புதுத் தலைவனுக்கு ஜே" என்று கூறிவிட்டு, ஜாதித் தலைவனையும், அவன் கூட்டத்தாரையும் ஊரைவிட்டுத் துரத்துவதைப் பற்றி இனிமேல் பேசுவதில்லை என்று வாக்கும் அளித்து விட்டு, கிளர்ச்சிப் படையில் உள்ள வீரர்களின் கவனத்தையும் வேறு பக்கம் இழுக்க ஆரம்பித்து விட்டார். "இதுதானப்பா என்னுடைய வீரக்கதை" என்று முடித்து விட்டான் ஆண்டனி.

அவர்கள் மூவரும் இரண்டாயிரம் படிகளையும் அநேகமாக கடந்து தங்கள் அறைக்குப் பக்கத்திலே வந்து விட்டார்கள். மூன்றாவதாக சார்லஸ் சொல்ல வேண்டிய திடுக்கிடும் கதை பாக்கியிருந்தது. ஆண்டனி, அவனைப் பார்த்து "சார்லஸ் நீ உன் கதையைச் சொல்லு!" என்றான். சார்லஸ் சொல்ல ஆரம்பித்தான். "தோழர்களே! நான் உண்மையிலேயே இப்போது திடுக்கிடும் கதை தான் சொல்லப் போகிறேன். இரண்டாயிரம் படிகள் ஏறிய நாம் மறுபடியும் இரண்டாயிரம் படிகள் கீழே இறங்கி, மீண்டும் இரண்டாயிரம் படிகள் மேலே ஏற வேண்டும்" என்றான்.

"ஏன் — உன் "திடுக்கிடும் கதை" அவ்வளவு நீளமானதா?" என்றான் ரோமியோ!

"இல்லை ரோமியோ! நமது அறையின் சாவியை கீழ்த்தளத்தில் மேனேஜர் அறையிலேயே வைத்து விட்டு வந்துவிட்டேன்" என்று வருத்தமுடன் சொன்னான் சார்லஸ்.

[ இருவருக்கும் அது திடுக்கிடும் கதையாகத் தானே இருந்திருக்கும். ]

## திரு-கொச்சி அறப்போர் களத்தில் தி. மு. கழகம்

பொதுச் செயலாளர் அண்ணா அவர்களும் துணைச் செயலாளர் மதி அவர்களும் நாகர்கோயில் புறப்பட்டு சென்றிருக்கிறார்கள். திரு—கொச்சி தமிழர்களின் அறப்போரில் தி. மு. கழகம் கலந்து கொள்ளும் நேரம் நெருங்கிவிட்டது. கலைவாணர், என். எஸ். கிருஷ்ணன் அவர்களும் அறப்போர்க் களத்தில் இறங்கிட முடிவு செய்து அதை தி. மு. கழகத்திற்கு அறிவித்துள்ளார். நாஞ்சில் மாவட்டத் தி. மு. கழகம் அறப்போரில் கலந்து கொண்டுள்ள விபரங்களை விளக்கியும்—அடுத்து களம் புகும் நிலைகுறித்தும் தோழர் ஜான் தெளிவாக ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். அண்ணாவும், மதியும் நாகர்கோயிலில் 30-ந்தேதி பொதுக்கூட்டத்தில் பேசுவார்கள். மதுரை, திருச்சியிலிருந்தும் தி. மு. கழக தொண்டர் படைகள் நாகர்கோயில் நோக்கிப் புறப்படும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இதுவரை உள்ள நிலைமைகளில் இருந்து—தி. மு. கழகம் அறப்போரில் இறங்கிவிட முடிவு செய்துவிட்டதாகவே கூறிவிடலாம்.

## மலைக் கள்ளன்

'மலைக்கள்ளன்' திரைக்கதை வசன புத்தகம் வெளியிட நான் யாருக்கும் உரிமை கொடுக்கவில்லை என்பதையும் சென்னை கே. ஆர். நாராயணன் என்ற நபருக்கு நான் "முல்லைக்கொல்லை" என்ற புத்தகத்தை 16 பக்கங்கள் மட்டுமே வெளியிட்டுக் கொள்ள உரிமை அளித்திருக்கிறேன் என்பதையும் அதற்குமேல் அவர் அதிக பக்கங்கள் வெளியிட்டால் அதிலுள்ள கருத்துக்களுக்கு நான் பொறுப்பாளி அல்ல என்பதையும் பொதுமக்கட்கு அறிவிக்கிறேன்.

மு. கருணாநிதி


## எமது புதிய வெளியீடு

| | | |
|---|---|---|
| அரசியல் | ... | இலக்கியம் |
| கடவுள்கள் | ... | கலைகள் |
| மதக்கொள்கை | ... | தொழில்கள் |
| விழாக்கள் | ... | பண்புகள் |

இவைகள் அனைத்தும் இடம் பெறும் சரித்திர வரலாறு

நாவலர் இரா- நெடுஞ்செழியன் எம். ஏ., எழுதிய

**பண்டைக் கிரேக்கம்**

விலை ரூ. 1-0-0

திராவிடப்பண்ணை: • • தெப்பக்குளம் : : திருச்சி

[ சக்கரவர்த்தி திருமகன் தொடர்ச்சி ]

அண்ணாவின்!

# குடிசை நுழைந்த பூமான்!....

வான் நூல் வடிவம் கொடுத்தாற் போல் தோன்றுகிறது ”

மே 23ந் தேதி மேற்கண்டவாறு எழுதிய ஆச்சாரியார், ஜூலை 18ந்தேதி அதே கல்கியில்,

“ராம காதையைப் பற்றிய விஷயங்களைப் பெற்றது வால்மீகி நூல் வழியேதான்; வேறு எங்கிருந்தும் அல்ல!” என்று உறுதியாகக் கூறுகிறார்!—இன்னும் பாருங்கள் சக்கரவர்த்தியாரின் முரண்பாட்டை!

“வால்மீகிக்கு முன்னதாக, யாரேனும் ஒரு புராணமோ—பாட்டோ — சரித்திரமோ—அல்லது கல்சாசனமோ எழுதியிருந்து அதில் விஷயங்கள் வேறுவிதமாக எழுதி வைத்திருப்பதைக் காண்கிறோமா? அப்படி ஏதேனும் இருந்திருக்கும் பட்சத்தில் வால்மீகி முனிவரானவர், ராமனுக்கும் தேவர்களுக்கும் பட்சபாதமாக மாற்றியும் விஷயங்களை மூடியும் மறைத்தும் சொல்லி சமாதானங்களைக்காட்டி நம்மை ஏமாற்றுகிறார் என்று ஒரு வேளை வாதாடலாம்.

முதலிலே ஒரு கதையிலிருந்து அதை மூடி மறைத்து மழுப்பிச் சொன்னால் அதை “ஏமாற்றுதல்” என்று கூறலாம் என்பதாக ஜூலை 18ம் தேதிய இதழில் குறிப்பிடுகிறார். ராமர் கதையை முதலில் எழுதியது வால்மீகி—வால்மீகி, ராமனைபெரிய வீரனாக சித்தரித்தார். அந்த வீரனை அவதார புருஷனாக மாற்றினார் கம்பர். இதை தனது முதல் கட்டுரையில் ஆச்சாரியார் அவர்களே, குறிப்பிட்டிருக்கிறார். இதை “ஏமாற்றுதல்” என்று ஆச்சாரியார் ஒப்புக்கொள்வாரா? மாட்டாரா? இப்போது!—அது மட்டுமல்ல; வால்மீகிதான் ராமாயணத்தின் கர்த்தா—அந்த வால்மீகி சிருஷ்டித்த அகல்யா என்ற பாத்திரத்தை கம்பர் மாற்றி திருத்திவிட்டார். இதை தனது பாஷைப்படி— கம்பர் நம்மை ஏமாற்றுகிறார்” என்று ஆச்சாரியார் உரைத்திட முன் வருவாரா? அகல்யாவைப் பற்றி ஆச்சாரியாரே தீட்டுகிறார் கவனியுங்கள்!

“ஒரு நாள் இந்திரன், சமயம் பார்த்து. ஆசிரமத்தில் முனிவர் இல்லாத காலத்தில் கௌதமருடைய உருவத்தையும் முனி வேஷத்தையும் தரித்துக்கொண்டு ஆசிரமத்துக்குள் புகுந்தான். அகலிகையின் உலக பிரச்சித்தமான அழகை நினைத்து அவளை அடையும் கெட்ட எண்ணத்துடன் வந்தான். இவ்வாறு திருட்டுத்தனமாக வந்த தேவராசன் அகல்யா தேவியைப் பார்த்து, ‘அழகியே எனக்கு ஆசை மேலிட்டிருக்கிறது. இந்த நிலையில் காலப் பொருத்தம் பார்க்கலாகாது. நாம் கூடுவோம் என்று முனிவர்சொல்லுவதுபோல் சொன்னான்.

ரிஷியின் மனைவி உடனே விஷயத்தைத் தெரிந்துகொண்டு விட்டாள். இவன் தன் புருஷன் அல்ல. இந்திரன் என்பது தனக்குத் தெரிந்துவிட்டது. ஆயினும் தேவராஜனே தன்னைத் தேடி வந்தான் என்று தன் அழகைப் பற்றி கர்வப்பட்டு மன நிலையிழந்துவிட்டாள். தேவராசனுடைய விருப்பத்திற்கு உடன்பட்டு விட்டாள்.

பிறகு “தேவராஜனே, சீக்கிரம் அப்புறப்பட்டுப்போ பெரும் அபாயத்திலிருந்து எப்படியாவது காப்பாற்றிக்கோள் என்றுஎச்சரித்தாள்.”

ஜூலை 18ம் தேதி இதழில் அகல்யாவைப்பற்றி ஆச்சாரியார் எழுதியுள்ளதுதான் மேலேயிருப்பது.

“இது வால்மீகி ராமாயணத்திலுள்ள அகலிகைக் கதை. மற்ற புராணங்களிலும் கதைகளிலும் சில விஷயங்கள் பேதப்பட்டு வழங்கி வருகின்றன. அதனால் குழப்பம் வேண்டியதில்லை.” என்றும் ஆச்சாரியார் போதிக்கிறார். மூலக்கதையிலேயுள்ள உண்மை பேதப்படுமேயானல் அப்படி பேதமுண்டாக்கி எழுதியவர் நம்மை ஏமாற்றஎண்ணுகிறவர் என்று வாதிடலாம் எனச் சொல்லிய ஆச்சாரியாரே—அதனால் குழப்பம் வேண்டியதில்லையென்றும் கூறுவதுதான் விந்தை! தலைவலி ஏற்படுகிற அளவுக்கு, குழப்பத்தை உண்டாக்கிவிட்டு, குழப்பம் வேண்டியதில்லை என்றும் அறிவுரை பகருகிறார்.

“மோத்தத்தில் தேவர்கள் நல்ல சுபாவம் கோண்டவர்கள் அவர்களிலும் சிலர் தீயகாரியங்களைச் செய்து அதனால்கஷ்டமும் படுவார்கள்.

ராக்ஷசர் என்பவர் அதர்மத்துக்கு கோஞ்சமும் பயப்படாத துஷ்டர்கள், குலம். ராக்ஷசர்களிலும்கூட ஒருசிலர் அறிவாளிகளும் நல்லவர்களும் இருந்தார்கள்.”

ஜூலை 18 இதழில் ஆச்சாரியார் எழுதுகிறார் இப்படி! அதே இதழில்தான் தேவர்களின் தலைவன் இந்திரனும், தேவரிஷியின் மனைவி அகலிகையும் கள்ள இன்பத்தில் ஈடுபட்ட கதையையும் அவர் வரைந்திருக்கிறார். வால்மீகி ராமாயணத்தில் ராமன் கதாநாயகனும்– ராவணன் வில்லனும்! கதாநாயகன் ராமன், கற்பிழந்த அகலிகை சாபவிமோசனம் பெற்றதும் அவள் காலில் விழுந்து வணங்குகிறான். அதையும் ஆச்சாரியார் எழுதத் தவறவில்லை. பலாத்காரத்தினால் கற்பிழந்த பாவையரையே சமுதாயம் தீண்ட மறுக்கிறது. அந்த சமுதாயத்தைக் கண்டிக்க வக்கற்ற சக்கரவர்த்தியார், “பெரிய மனுஷனே கை பிடித்திழுக்கும்போது எப்படி மறுப்பது” என எண்ணி கற்பைப் பறி கொடுத்த அகலிகையை ராமனை விட்டே வணங்கச் சொல்லுகிறார். வெட்கக் கேடு! வெட்கக் கேடு! தேவர்கள் நல்லவர்களாம்—சிலர்தான் கெட்டவர்களாம். தேவராஜனும் இந்திரனின் நடத்தையே இப்படியிருக்கும்போது அவன் குடிபடைகள் எப்படியிருப்பார்கள் என்று கூறவும் வேண்டுமா?—இராவணன் தீய குணத்தானும்—தேவர்கள் நல்லவர்களாம்—காமச் சேட்டையோடு மட்டும் முடியவில்லையே, அந்தக் கயவர்களின் கதை! ஆச்சாரியாரே அவரையுமறியாமல்எழுதுகிறார் படியுங்கள்!

## குதிரை திருடிய கோமான்!.....

“அம்சுமான் என்ற ராஜகுமாரன் மிகவும் குணசாலி. சீலமும் அறிவும் பொருந்தியவன். சகரனுடைய அஸ்வமேதயாகத்துக்கான குதிரையை அம்சுமான் ராஜகுமாரன் காத்துவந்தான். ஆனல் இந்திரன் ராக்ஷச வேடம் பூண்டு வந்து அந்தக் குதிரையைக் கோண்டுபோய், மகாவிஷ்ணுவாகிய கபிலர் பக்கம் மறைத்துவிட்டான். குதிரையைத் தேடிப் போன சகரபுத்திரர்கள் அறுபதினாயிரம் பேரும், கபிலர் தான் குதிரையை திருடியது என சந்தேகப்பட்டு பாய்ந்தார்கள். கபிலர் அந்த அறுபதாயிரம் பேரையும் சாம்பலாக்கிவிட்டார்.”

ஜூலை 4-ந்தேதி இதழிலே ஆச்சாரியார் தந்த கதை இது! நல்லவனிடம்இருந்த குதிரையை இந்திரன் திருடிப் போய் கபிலரிடம் ஒளித்த காரணத்தால் அறுபதாயிரம் பேர் ஏக காலத்தில் அணுகுண்டு பட்டதுபோல சாம்பலாகியிருக்கிறார்கள். இந்த தேவர்கள் நல்லவர்களாம்; ஆச்சாரியார் முரண்பட்டு, முரண்பட்டு, முணகுகிறார்! சக்ரவர்த்தி திருமகன் மூலம் சாய்ந்து வரும் ஆரியத்துக்கு சப்பைக்கட்டு போடுகிறார்-பாவம்!

யாகங்களை அழிக்கும் அரக்கரை அழிக்கவே விஸ்வாமித்திரன் ராமஇலக்குமணர் இருவரையும் அழைத்துவந்தான் எனக் கூறும் ஆச்சாரியார், ஜூலை 4-ந் தேதி இதழில் ஒரு உண்மையை உளருகிறார்பாருங்கள்-தேவர்கள் நல்லவர்கள்-ஒரு சிலர்கேடு செய்யலாம் என்று ஒரு இதழில் எழுதிய அவர்-இதோ தேவர்கள் அனைவரையுமே தீயவராக்குகிறார் ஜூலை 4-ந்தேதி கல்கியில்!

“அசுவமேத யாகங்களைத்தடை செய்வது தேவர்களுடைய வழக்கம்.”

இப்படி முன்னுக்குப்பின் உதைக்கிற நிலைமையிலே, ஆச்சாரியாரின்—ஆம்– சக்கரவர்த்தியாரின் செல்வத் திருமகன்—வளர்ந்து கொண்டு போகிறான். சரிந்து போய்க் கொண்டிருக்கும் ஆரிய சாம்ராஜ்யத்தைத் தூக்கி நிறுத்தலாம் என்ற அவரது கனவு பலிக்காது — நிச்சயம் பலிக்காது-என்பதற்கு அவரது முரண்பட்ட கட்டுரைகளே சான்று பகருகின்றன. பார்ப்போம்; இன்னும் “திருமகன்” எந்தெந்தத் திக்கில் நடைபோடுகிறான் என்று!

## பொன்முடி....

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

யாரால் பேசப்படுமா தோழனே! விடுதலை எழுதுகிறது — அதை வைத்து தயவுசெய்து பெரியாரை தவருகக் கருதிவிடாதே! செருப்பு தைத்த தொழிலாளியாம் ஸ்டாலின் புதிய பூமியின் காவலனாக மாறினன் — வர்ணக்காரன் ஹிட்லர் வையகத்தையே ஒரு உலுக்கு உலுக்கி காட்டினன். செக்கிழுக்கும் பரம்பரையிலேதான் வந்தார் அறிஞர் ஆர். கே. சண்முகம், அகிலம் புகழ் நிபுணராய் வாழ்ந்தார். செக்கிழுப்பவரை அவ்வளவு மோசமாக, விடுதலைதான் கருதிவிட்டதே தவிர—பெரியாரோ – அல்லது நாங்களோ கருதி விட்டோம் என்று கருதி தப்புக் கணக்குப் போட்டு விடாதே!

இடம் கிடைக்காதவர்கள் — தங்கள் முழக்கத்தைக் கேட்க மக்கள் வரவில்லையே என்று ஏங்குகிறவர்கள் — தங்கள் கூடாரத்தையே மறந்து தங்களையுமறியாமல் நொந்து போன சங்கத்தாரின் நடையிலே பேசிடத்தான் செய்வார்கள்– அதையெல்லாம் கணக்கிலே சேர்த்து தி. மு. கழகத்தைப் பற்றி முடிவுக்கு வராதே! — எங்களின் தனித்தன்மை– எங்களின் கொள்கைத் தெளிவு — இவைகளிலே நம்பிக்கை யிருக்குமானல் இப்பக்கமாக நடக்கத் துவங்கு!

இவ்விதமான தப்புக் கணக்குகளால் தி. மு. கழகத்தின் புனிதத்தன்மைக்கு மாசு கற்பித்து காங்கிரஸ் என்னும் ஓட்டைப் படகிற்கு மக்களை இழுத்து வரலாம் என்று மற்றவர் கருதுவது போல நீயும் எண்ணி ஏமாந்து விடாதே, என்னருமைத் தோழனே!

ஓணன் பழிக்கிறதே என்பதற்காக உதய சூரியனை நீயும் பழிக்க ஆரம்பித்து விடாதே! பிற பின்னர்!

அன்புள்ள

**பொன்முடி**

# கடைசிப்பக்கம்



சென்னியப்பன்—சேலம்.

(?) "சுகம் எங்கே?" என்ற கட்டுரையைக் கண்ட ஒரு பிரகிருதி, தலை கீழாக வெளவால் போலத் தொங்குகிறதே ஏன்?

எல்லாம் பிழைப்பதற்காக இருக்கும் ஒரே இடத்தில் பிடித்துத்தீர வேண்டிய கா, கா, கா!

பிரேமானந்தன்—ராயபேட்டை.

(?) இரு இளங்காதலர் ஒருவரை யொருவர் காதலித்து, சுகம் அனுபவித்து, திருமணம் செய்து கொள்ளும் போது—இருவரும் சகோதரர்கள் என்று தெரிந்துவிட்டால் இருவரின் நிலையும் என்ன? அந்நிலையில் உள்ள என் அன்புத் தோழனுக்கு நான் எவ்வாறு ஆறுதல் அளிப்பது?

அன்புத் தோழனுக்கு ஆறுதல் அளிக்க நீர் கலியாணமாகாதவராயிருக்க வேண்டும்! அப்படித்தானா? அதை முதலில் சொல்லும்!

டி. என். ஆர். சாமி—திருப்பூர்.

(?) தங்கள் திராவிடநாட்டுக்கு அரசினர் கொடி என்ன? (பதில், திராவிட நாடு பிரியட்டும் பார்க்கலாம் என்று சொல்ல வேண்டாம்)—

"பிரியட்டும் பார்க்கலாம்" என்று பதில் சொல்ல மாட்டேன் — பிரிகிற சமயத்தில் பார்க்கலாம் தோழரே! பொறுத்திருங்கள்!

(?) தினத்தந்தி, தி. மு. க. வைப் பற்றி தவறான செய்திகளை வெளியிடுவதின் நோக்கமென்ன?

கேள்வி தவறு தோழரே! இப்படிக் கேளுங்கள்—தவறான தந்தி, தி. மு. க.வைப் பற்றி தினச் செய்திகளை வெளியிடுவதின் நோக்க மென்ன—என்பதாக!

(?) கவர்னர் சம்பளத்தைக் குறைக்கத்தான் வேண்டுமா?

வேண்டாமென்று சிலர் குரைத்துக் கொண்டிருக்கிறார்களே!

மனத்துணைநாதன்—வேலூர்.

(?) ஆங்கிலத்திலேயிருந்து தழுவி எழுதிய ஒரு கதையை இன்னொருவரும் தழுவி எழுதுவது எப்படித் தவறாகும்? அதைக் குறை கூறுவது சரியா?

அதே ஆங்கிலக் கதையை தழுவி எழுதுவதில் குற்றமில்லை. தழுவி எழுதப்பட்ட கற்பனையிலேயிருந்து, சம்பவங்களைக் களவாடுவதும்—தழுவி எழுதியவர் அமைத்த அவரது வசனங்களை சுரண்டிப் பிழைப்பதும் தகாது. உதாரணமாக, தோழர் ஏ. கே. வேலன், "ஏழைபடும் பாடு" என்ற விக்டர்யூகோவின் கதையைத் தழுவி, கைதி என ஒரு நாடகம் எழுதியுள்ளார். அதில் உள்ள வேலனது வசனங்களையும், அவர் புகுத்திய புதிய சம்பவங்களையும், பிறர் திருடி வாழ்ந்தால் அதை அவரால் பொறுக்க முடியுமா? — அதுவும் உறவுமுறை யுடையவரே செய்வது அநியாயமல்லவா?

முத்தையா—திருநெல்வேலி

(?) இச்சகத்திற்கு மயங்கியும், அச்சுறுத்தலுக்கு அஞ்சியும் தி. மு. கழகம் தனது தனித்தன்மையை என்றைக்கும் பலி கொடுக்க சம்மதிக்காது என்று 21—11—53 நம்நாடு தலையங்கத்தில் காணப்படுகிறதே; தனித்தன்மை என்றால் என்ன?

மயங்குதலும், அஞ்சுதலும் இல்லாததுதான் தி. மு. கழகத்தின் தனித்தன்மை.

(?) ராயின் பொருளாதார தத்துவத்தை. தாங்கள் பின்பற்றுவதுண்டா?

யாருடைய தத்துவமாயிருப்பினும்—திராவிடத்திற்கு ஏற்புடையதாயிருக்கும் அங்கங்களை தி. மு. கழகம் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கும்

(?) டால்மியாபுரம் என்பதற்கு பதில் கல்லக்குடி என்பதற்கும்—மோரீஸ் என்பதற்கு பதில் இந்துஸ்தான் 10, என்பதற்கும் உள்ள வித்தியாசமென்ன?

அவமானச் சின்னம் என்பதற்குப் பதில் தன்மானமாளிகை என்பதற்கும்—வீடு என்பதற்கு பதில் கிரஹம் என்பதற்கும் உள்ள வித்தியாசம் எதுவோ— அந்த வித்தியாசம்தான் நண்பரே!

தேவன்—தியாகராயநகர்.

(?) தி.மு.க. குடியாத்தம் தேர்தலில் யாரையும் ஆதரிக்காதது ஏன்? அங்கு செல்வாக்கு இல்லை என்பதாலா?

இல்லை என்பதற்காக அல்ல! இருக்கிற நல்ல செல்வாக்கு போய்விடக் கூடாதே என்பதற்காகத்தான்!

கே. ஆறுமுகம்—சென்னை 12.

(?) மனிதன் இயற்கையா? செயற்கையா?

செயற்கையின் இயற்கை.

ந. சுந்தரம்—அம்பத்தூர்.

(?) ராஜேந்திர பிரசாத், மாங்கன்றுக்கு பால் வார்த்தாராமே! உங்கள் கருத்து என்ன?

நாடு சிறிது முன்னேறியிருக்கிறது என்று ராஷ்டிரபதிகாட்டுகிறார் போலும் — பாம்புக்கு பால் வார்ப்பதிலேயிருந்து இப்போது மாங்கன்றுக்கு பால் வார்க்கிற நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். இவர்களது முழு முன்னேற்றத்திற்கு முன்பே, மனிதக் கன்றுகள் பட்டுப் போகாமல் இருக்க வேண்டும்.

சுந்தரேசன்—கொடுமுடி.

(?) உலகத்தில் வளராதது எது?

கண்ணும், மதவாதியின் மூளையும்!

பி. மலையான்—சென்னை-1.

(?) ஆண்டவன் தூங்கிவிட்டால் என்ன ஆகும்?

உலகமே ஸ்ரீரங்கமாகிவிடும் (!)

●

## உதை வாங்கப் போகிறான்!

★

நகைச்சுவை அரசர் என். எஸ். கே. யுடன் பேசிக் கொண்டிருப்பதிலே ஒரு தனி இன்பம். பலப் பல நகைச் சுவைகள் அவர் பேச்சின் போது உதிரும். அதில் ஒன்று... அவர் சொன்னது.

நடுராத்திரியில் ஒரு சாராயக் கடைக்குள் ஒருவன் புகுந்தானாம். கடை பூட்டும் சமயம். புகுந்தவன் ஒரு துலாம் சாராயம் கேட்டானாம். கடைக்காரன் நேரமாகிவிட்டது கடை பூட்டிவிட்டேன் என்றானாம்.

"அய்யா! அய்யா! நான் உதை வாங்கப் போகவேண்டும்— உடம்பு வலி தெரியாமலிருக்க, ஒரு துலாம் சாராயம் கொடு" என்று கெஞ்சினானாம் வந்தவன்.

கடைக்காரன் இரக்கப்பட்டு, கடையைத் திறந்து ஒரு துலாம் சாராயம் கொடுத்தானாம். அதைக் குடித்து விட்டு மறுபடியும் கேட்டானாம். அவன் கொடுத்தான். இப்படியே பல துலாம்கள் குடித்துவிட்டு கடைசியாக, "அய்யா! நான் நிறைய உதை வாங்க வேண்டும், ஒரு பாட்டிலாகவே சாராயம் கொடு" என்று வாங்கி அதையும் குடித்தான். கடைக்காரன் அவனிடம், "ஏனடா! எங்கேபோய் உதை வாங்கப் போகிறாய்?" என்று ஆவலுடன் கேட்டான். வந்தவன், "இங்கே தான் உதை வாங்கப் போகிறேன்—ஏனென்றால் சாராயத்துக்கு நான் காசு கொண்டு வரவில்லை" என்று பதில் சொன்னானாம்.

## புதுமணம் வீசுகிறது - - பூநாகம் இருக்குமோ?

'டுமீல்' சப்தம் ஓய்ந்தது. துயரக் குரலொலி ஒடுங்கிற்று. ஆமாம், இந்தோ சீனாவிலே போர் நின்று விட்டது. இந்தச் செய்தி நமதுள்ளங்களிலே செந்தேனைப் பாய்ச்சுகிறது — மகிழ்கிறோம்—பிறரையும் மகிழ வைக்கிறோம். ஆனால் இந்தோசீனா போரின் சமாதான சாசனம் இறுதிவரை காப்பாற்றப்படுமா என்பது, ஐயத்திற்கிடமளிப்பதாகஅமைந்திருக்கிறது. எந்த நாட்டின் மீது நாம் சந்தேகக் கண்ணோட்டம் செலுத்தினோமோ அந்த நாடு—குபேர அமெரிக்க நாடு சமாதான ஒப்பந்தத்தில் கையொப்பமிடவில்லை என்கின்றபோது அமைதி விரும்பிகளுக்கு அச்சம் ஏற்படத்தான் செய்கிறது. பூ மலர்ந்து புதுமணம் வீசினாலும் பூவின் மறைவிலே பூநாகம் இருக்குமோ என்ற திகில் மலரை முகர விரும்புவோருக்கு ஏற்பட்டால் அதில் ஆச்சரியமில்லை.

மு. கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. அலுவலகம்: 62, எஸ். பி. சன்னதி தெரு, ராயப்பேட்டை, சென்னை—14.